**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 395/2024**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லட்சுமணன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மகாலிங்கம் | தொழில் | : | தலைமைக்காவலர் (பணி ஓய்வு) |
| கிராமம் | : | சுரண்டை | வயது | : | 75 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 18.02.2026.

**(1, 5 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது காவல்துறையில் தலைமைக்காவலராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2009ம் வருடம் நான் சுரண்டை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வந்தேன். 1ம் எதிரியை எனக்கு தெரியும். 24.02.2009 அன்று மாலை 06.00 மணிக்கு பங்களாச்சுரண்டை பேரன்புருக் மேல்நிலைப்பள்ளியின் முன்பு உதவி ஆய்வாளர் அந்தோணிசபரிமுத்துவுடன், நானும், என்னுடன் முதல்நிலைக்காவலர் கோபி மற்றும் காவலர் பாலமுருகன் ஆகியோர் சகிதம் வாகனத்தணிக்கை செய்து கொண்டிருக்கும் போது அந்த வழியாக ஒரு இருசக்கர வாகனம் வந்தது. அந்தவாகனம் TN-5854-40 என்ற பதிவெண் கொண்ட சுசுகி வாகனத்தை தணிக்கை செய்வதற்காக நிறுத்தினோம். அதை மறித்து நிறுத்திய போது அதில் வந்த எதிரி தேவராஜ் மகன் அருள்குமார் என்ற கோழிஅருள் என்பவர் எங்களை அவதூறான வார்த்தைகளால் பேசினார். உதவி ஆய்வாளர் அவரை எச்சரித்தார்.

அப்போது அவர் இருசக்கரவாகனத்தின் டேங்க் கவரிலிருந்து வெடிகுண்டை எடுத்து உதவி ஆய்வாளரை நோக்கி செத்து ஒழிந்து போ என்று எறிந்தார். உதவி ஆய்வாளர் விலகிக்கொண்டதினால் அந்த வெடிகுண்டு ரோட்டில் விழுந்து வெடித்தது. மக்கள் தெறித்து ஓடினார்கள். வாகனங்கள் அங்கெங்கே நின்றது. எதிரி கோழிஅருள் சட்டையின் பின்புறம் வைத்திருந்த அரிவாளை எடுத்து சுழற்றி காட்டி யாராவது வந்தால் வெட்டி விடுவேன் என்று கூறினார்.

நாங்கள் அவரை மடக்கி பிடித்தோம். பின்னர் அவர் வைத்திருந்த அரிவாள், வாகனம், வெடிக்காத ஒரு வெடிகுண்டு ஆகியவற்றை கைப்பற்றி, எதிரியையும், சொத்துக்களையும் காவல்நிலையம் கொண்டு வந்தோம். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>4ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

சம்பவநாள் என்னுடைய பணி ரோல் காலில் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த விபரம் என்னுடைய தனிப்பட்ட டைரியிலும், காவல்நிலைய பொதுநாட்குறிப்பிலும் துலங்கும் என்றால் சரிதான். அந்த ஆவணங்களை நான் ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ நாள் எத்தனை வாகனங்களை சோதனை செய்தோம் என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் சம்பவநாளில் சுரண்டை காவல்நிலையத்தில் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் ஆய்வாளர் விசாரணையிலும் சொல்லியுள்ளேன்.

சம்பவயிடம் போக்குவரத்து நிறைந்த பிரதான சாலை என்றால் சரிதான். அது வீ.கே.புதூர் - சுரண்டை ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். சாலையின் தென்புறம் பள்ளிக்கூடமும், கிழக்குபுறம் வரிசையாக

கடைகளும், ரோடும் உள்ளது. வாகனத்தை நிறுத்தி நாங்கள் சோதனை செய்தோம் என்றால் சரிதான். ரோட்டின் எந்த திசையில் வெடிகுண்டு வெடித்தது என்றால் நாங்கள் நின்ற இடத்திற்கு கீழ்புறம் வெடிகுண்டு வெடித்தது. வெடி வெடித்தவுடன் சுற்றி நின்ற மக்கள் ஓடினார்கள்.

1வது எதிரியை ஏற்கனவே ஒரு நாளைக்கு முன்னால் சுரண்டை போலீசார் அழைத்து சென்று செல்வின் நினைவு நாளில் பிரச்சனை ஏற்படும் என்பதினால், முன் எச்சரிக்கை நடவடிக்கை செய்து வைத்திருந்தார்கள் என்றாலும், பின்னர் பின்யோசனையின் பேரில் இவ்வாறு ஒரு பொய் வழக்கு போடப்பட்டது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கு பின்னர் 1வது எதிரி மீது குண்டர் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. குண்டர் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காக இந்த வழக்கு அடிப்படை வழக்காக போடப்பட்டது என்றால் சரியல்ல.

நான் சம்பவநாள் சம்பவயிடத்தில் வாகன சோதனையில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வெடிபொருட்கள் கையாளுவது குறித்து தனிபயிற்சி இல்லை. வெடிக்காத குண்டை யார் எடுத்து சென்றார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. எதிரியின் பைக்கை சம்பவயிடத்தில் வைத்து கைப்பற்றியதாக கூறியது பொய் என்றால் சரியல்ல. நான் சம்பவநாள் அ.சா.1டன் பணியில் இருக்கவில்லை என்றாலும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

(4ம் எதிரியின் குறுக்கு விசாரணையானது, இதர எதிரிகளின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

<u>**மறுவிசாரணை**</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA Digitally signed by J CHRISTAL BABITHA Date: 2026.02.19 19:13:07 +0530

**<u>வாக்குமூலம்</u>**
**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**
**<u>வழக்கு எண் : SC.No. 395/2024</u>**
**<u>வழக்கு சாட்சி PW-4</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலமுருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | நடராஜன் | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | புளியங்குடி | வயது | : | 51 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 18.02.2026.

**(1, 5 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரி ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது புளியங்குடி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2009ம் வருடம் நான் சுரண்டை காவல்நிலையத்தில் இரண்டாம்நிலைக்காவலராக பணிபுரிந்து வந்தேன். 1ம் எதிரியை எனக்கு தெரியும். 24.02.2009 அன்று மாலை 06.00 மணிக்கு பங்களாச்சுரண்டை பேரன்புருக் மேல்நிலைப்பள்ளியின் முன்பு உதவி ஆய்வாளர் அந்தோணிசபரிமுத்துவுடன், நானும், என்னுடன் தலைமைக்காவலர் லட்சுமணன், காவலர் கோபி ஆகியோர் சகிதம் வாகனத்தணிக்கை செய்து கொண்டிருக்கும் போது அந்த வழியாக ஒரு இருசக்கர வாகனம் வந்தது. அந்தவாகனம் TN-58B-5440 என்ற பதிவெண் கொண்ட சுசுகி வாகனத்தை தணிக்கை செய்வதற்காக நிறுத்தினோம். அதை மறித்து நிறுத்திய போது பின்னர் பெயர், விலாசம் கேட்டு தெரிந்து கொண்ட எதிரி தேவராஜ் மகன் அருள்குமார் என்ற கோழிஅருள் என்பவர் எங்களை பார்த்து தேவடியா மகன்களா? உங்களால்

நான் வாழ முடியாது, நீங்கள் செத்தால் தான் நான் வாழ முடியும் என்று அவதூறான வார்த்தைகளால் பேசினார். உதவி ஆய்வாளர் அவரை எச்சரித்தார். அப்போது அவர் இருசக்கரவாகனத்தின் டேங்க் கவரிலிருந்து ஒரு பொருளை எடுத்து உதவி ஆய்வாளரை நோக்கி செத்து தொலைங்கடா என்று சொல்லி எறிந்தார். உதவி ஆய்வாளர் சுதாரித்து விலகிக்கொண்டதினால் அந்த பொருள் ரோட்டில் விழுந்து வெடித்தது. பின்னர் தான் அது வெடிகுண்டு எனத் தெரிந்தது.

எதிரி கோழிஅருள் சட்டையின் பின்புறம் வைத்திருந்த அரிவாளை எடுத்து இதோடு செத்து தொலைங்கடா, என்று கூறிக்கொண்டு எங்களை பார்த்து வந்தார். நாங்கள் பலம்பிரயோகித்து அவரை மடக்கி பிடித்தோம். அப்போது கோபி என்ற காவலருக்கு சிறு சிறு காயங்கள் எற்பட்டது.

நாங்கள் அவரை மடக்கி பிடித்தோம். பின்னர் அவர் வைத்திருந்த அரிவாள், வாகனம், வெடிக்காத ஒரு வெடிகுண்டு ஆகியவற்றை கைப்பற்றி எதிரியையும், சொத்துக்களையும் காவல்நிலையம் கொண்டு வந்தோம். இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>4 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :</u>

சம்பவநாள் என்னுடைய பணி ரோல் காலில் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த விபரம் என்னுடைய தனிப்பட்ட டைரியிலும், காவல்நிலைய பொதுநாட்குறிப்பிலும் துலங்கும் என்றால் சரிதான். அந்த ஆவணங்களை நான் ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவ நாள் எத்தனை வாகனங்களை சோதனை செய்தோம் என்று என்னால் சொல்ல

முடியாது என்றால் சரிதான். நான் சம்பவநாளில் சுரண்டை காவல்நிலையத்தில் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு தான் ஆய்வாளர் விசாரணையிலும் சொல்லியுள்ளேன்.

சம்பவயிடம் போக்குவரத்து நிறைந்த பிரதான சாலை என்றால் சரிதான். அது வீ.கே.புதூர் - சுரண்டை ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். சாலையின் தென்புறம் பள்ளிக்கூடமும், கிழக்குபுறம் வரிசையாக கடைகளும், ரோடும் உள்ளது. வாகனத்தை நிறுத்தி நாங்கள் சோதனை செய்தோம் என்றால் சரிதான். ரோட்டின் எந்த திசையில் வெடிகுண்டு வெடித்தது என்றால் நாங்கள் நின்ற இடத்திற்கு மேற்குபுறம் வெடிகுண்டு வெடித்தது. வெடி வெடித்தவுடன் சுற்றி நின்ற மக்கள் ஓடினார்கள்.

1வது எதிரியை ஏற்கனவே ஒரு நாளைக்கு முன்னால் சுரண்டை போலீசார் அழைத்து சென்று செல்வின் நினைவு நாளில் பிரச்சனை ஏற்படும் என்பதினால், முன் எச்சரிக்கை நடவடிக்கை செய்து வைத்திருந்தார்கள் என்றாலும், பின்னர் பின்யோசனையின் பேரில் இவ்வாறு ஒரு பொய் வழக்கு போடப்பட்டது என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கு பின்னர் 1வது எதிரி மீது குண்டர் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் சரிதான். குண்டர் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்காக இந்த வழக்கு அடிப்படை வழக்காக போடப்பட்டது என்றால் சரியல்ல.

நான் சம்பவநாள் சம்பவயிடத்தில் வாகன சோதனையில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வெடிபொருட்கள்

கையாளுவது குறித்து தனிபயிற்சி இல்லை. வெடிக்காத குண்டை யார் எடுத்து சென்றார்கள் என்றால் உதவி ஆய்வாளர் எடுத்து சென்றார். எதிரியின் பைக்கை சம்பவயிடத்தில் வைத்து கைப்பற்றியதாக கூறியது பொய் என்றால் சரியல்ல. நான் சம்பவநாள் அ.சா.1 டன் பணியில் இருக்கவில்லை என்றாலும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல.

(4ம் எதிரியின் குறுக்கு விசாரணையானது, இதர எதிரிகளின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.19 19:13:18 +0530